உ

அம்பாள் துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை

பதிவு இல. J/3/84/23-09-1988

# 18ஆவது ஆண்டறிக்கை

2000

உ

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை

## 2000

*நிர்வாக சபை :*

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. – *தலைவர்*

திரு. ந. செல்வநாயகம் – *உப-தலைவர்*

திரு. மு. சபாநாதன், *நீதிபதி – உப-தலைவர்*

திருமதி ம. இராமநாதர் – *பொதுச் செயலாளர்*

திரு. அ. சண்முகநாதன் – *பொருளாளர்*

திரு. நா. தவநாதன் – *நிர்வாகச் செயலாளர்*

திரு. சு. ஏழூர்நாயகம் – *உப-பொருளாளர்*

திரு. சி. அருளானந்தசிவம்

திரு. ச. ஆறுமுகநாதன்

திரு. மு. அருளையா

திரு. ச. விநாயகரத்தினம்

திரு. ச. கந்தையா

திரு. சி. குமாரசாமி

திரு. நா. தவமணிநாயகம்

திரு. ஆறு. திருமுருகன்

திரு. சி. புஷ்பநாதன் *(கொழும்புப் பிரதிநிதி)*

திரு. சு. முருகையா

திரு. நா. சிவநாதன் -- *(இந்து இளைஞர் சங்கப் பிரதிநிதி)*

உ
அம்பாள் துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்
## தெல்லிப்பழை
# 18 ஆவது ஆண்டு நிறைவு
# பரிசளிப்பு விழா அறிக்கை

## 27 – 02 – 2000 ஞாயிற்றுக்கிழமை

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவியின் திருவருளை நெஞ்சிலே நிறுத்தி நல்லைக் கந்தப் பெருமானின் திருவடிகளைத் துதித்து அனைவரையும் வணங்கி பரிசளிப்புவிழா அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

இன்றைய விழாவிற்குத் தலைமை தாங்கும் எங்கள் வணக்கத்துக்குரிய பெரியம்மா கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்களே,

வணக்கத்துக்குரிய சிவாச்சாரியப் பெருமக்களே,
நல்லை ஆதீன குருமகாசந்நிதானம் அவர்களே,

மதிப்பார்ந்த முதன்மை விருந்தினர் சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி கிருபாதேவி வீரசிங்கம் அம்மையார் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் யாழ் அரச செயலக திட்டமிடல் பணிப்பாளர் திரு செ. மகாலிங்கம் ஐயா அவர்களே, மதிப்பார்ந்த நீதிபதி புலவர் திரு மு. திருநாவுக்கரசு ஐயா அவர்களே, இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அம்மா அவர்களே, கல்விக் கோட்டங்களின் மதிப்பார்ந்த பணிப்பாளர்களே,

இங்கு வருகை தந்திருக்கும் பேரறிஞர்களே, பிர முகர்களே, நலன்விரும்பிகளே, தங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 18ஆம் ஆண்டு நிறைவு விழாவில் இன்று நாம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் கூடியிருக்கிறோம். இவ் விழாவிற்குத் தலைமை தாங்கும் எங்கள் பெரியம்மா சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை அறியாதவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். அவர்களின் அரவணைப்பிலே வாழ்ந்து கல்வி கற்றுக் கொண்டிருக்கும் எங்களுக்கு எதுவித குறையுமில்லை என்பதை பெருமிதத்துடன் தெரிவிக்கின்றேன்.

அடுத்து இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் அதிபர் செல்வி கி. வீரசிங்கம் அம்மா அவர்களை வாழ்த்தி வணங்குகிறோம். கல்விக் கடமையிலும் கடவுள் நினைப்பிலும், சமுதாய உறவிலும் முன்னின்று பணிபுரிபவர் இவர். இன்று எங்கள் விழா விற்கு முதன்மை விருந்தினராக வருகைதந்து பரிசில் களை வழங்கி எமது இல்லத்தை ஊக்குவிக்க இருப்பது பெருமிதம் தரும் நிகழ்ச்சியாகும்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் பெரியார் திரு. செ. மகாலிங்கம் ஐயா அவர்கள் திட்டமிடல் பணிப் பாளராக இருந்து யாழ் அரச செயலகத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பவர். இவர்களின் வருகையினால் எங்கள் மகளிர் இல்லம் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றது.

எங்கள் பணிகளுக்கெல்லாம் ஆசியும் வாழ்த்தும் என்றென்றும் வழங்கிக் கொண்டிருப்பவர் நல்லை ஆதீ னத்தின் இன்றைய குருமுதல்வர் ஆவர். சுவாமிகள் எழுந்தருளி வருகை தருவதினால் எங்கள் நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் தெய்வீக அருள் கிடைக்கிறது.

சொல்லின் செல்வர் ஓய்வுபெற்ற நீதிபதி திருவாளர் மூ. திருநாவுக்கரசுஐயா அவர்கள் துர்க்காதேவியிடத்தும் எம்மிடத்தும்நீண்ட நெடிய தொடர்புடையவர். ஐயா அவர்களின் நகைச்சுவை ததும்பியபேச்சை இன்று நாம் கேட்டு மேலும் மகிழ்வடையப்போகிறோம்.

வாழ்த்துரை வழங்க வந்திருக்கின்ற இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி சிவஞாசுந்தரம் அம்மா அவர்கள் ஏறக்குறைய ஒரு தசாப்தகாலமாக எமது கல்விக் கடமைகளில் பின்னிப்பிணைந்து நிற்பவர். அம்மா அவர்களின் இதயசுத்தியும், எடுப்பான பேச்சும் காலத்துக்குக் காலம் எமக்கு அரணாக அமைபவை.

பிறந்த மண்ணைப் பெருமைப் படுத்திக்கொண்டிருக்கிற நலன் விரும்பிகள் பலர் இங்கே வருகை தந்திருக்கிறார்கள். அத்தனை பேருக்கும் எமது வணக்கம் உரித்தாகுக.

**மகளிர் இல்லத்தில் இடம்பெறுவோர் விபரம் :**

| | |
|---|---|
| ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 13 வரை கல்விகற்போர் | 47 பேர் |
| பல்கலைக்கழகத்தில் கல்வி கற்போர் | 03 பேர் |
| திருமகள் அழுத்தகம் | 02 பேர் |
| மகளிர் இல்ல அலுவலகம் | 02 பேர் |
| ஐம்பது வயதுக்கு மேற்பட்ட அன்னையர் | 08 பேர் |
| இல்லக் கடமைகளில் பணிபுரிவோர் | 04 பேர் |
| நல்லூர் மணிமண்டபப் பணியாளர் | 03 பேர் |
| சிற்றூழியர் | 03 பேர் |
| கோசாலைப்பணியாளர் | 01 |
| மொத்தம் | 73 |

**கல்வி :**

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இரண்டாம் வகுப்புதொடக்கம் க.பொ.த.உயர்தரவகுப்புவரை இல்லப் பிள்ளைகள் கல்விகற்று வருகிறார்கள். பிரத்தியேக வாகன

வசதிசெய்து இவர்களுடைய போக்குவரவு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. கல்லூரியில் மாணவர் தலைவர்களாக 03 பேர் பணியாற்றுகின்றனர். விளையாட்டுத் துறையிலும் இசைத் துறையிலும், நடனம் நடிப்புத் துறையிலும் எங்கள் இல்லப் பிள்ளைகள் இராமநாதன் கல்லூரியில் முன்னணியில் நிற்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு விசேட ஆசிரியர்களை நியமித்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 5 வரை கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு செல்வி ச. ரேவதி அவர்கள் பிரத்தியேகமாக பாடம் போதித்து வருகிறார். ஆங்கில பாட போதனையை திரு சி. அருளானந்தசிவம் அவர்கள் நல்லபடி ஆற்றி வருகிறார்கள். நடனம், நாட்டிய நாடகம் ஆகியவற்றிற்குரிய பயிற்சியை திருமதி நந்தினி சிவராஜன் அவர்கள் அளித்து வருகிறார். இசைத்துறை சார்ந்த போட்டிகளுக்கு செல்வி வி. வடிவாம்பிகை அவர்கள் பயிற்சி அளித்து வருகிறார். செல்வி ம. அகிலினி க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் 4B பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானார்.

**நிதி உதவி :**

மகளிர் இல்லப் பிள்ளைகளின் உணவு, உடை, கல்வி வைத்தியம் ஆகியவற்றுக்கு உள்நாட்டுப் பிரமுகர்களும் வெளிநாட்டு நிறுவனங்களும் தாராள சிந்தையோடு நிதி உதவி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

நிறுவனங்களின் பெயர்களையும் ரூபா ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட அன்பளிப்புகளை உதவியோர்களுடைய பெயர் விபரங்களையும் கீழே தருகின்றோம்.

1. திரு. K. V. நடராஜா — ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை நினைவாக ரூபா ஐந்து இலட்சம் (500,000/-) நிரந்தரவைப்பு.

2. சுவிற்சலாந்து சத்தியசாயி மண்டலியினர் மகளிர் இல்லக் கட்டடத் திருத்தத்திற்கு ரூபா. 493980/- (நாலு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து தொழாயிரத்து எண்பது)

3. திருமதி சேதா சண்முகசோதி அவுஸ்திரேலியா ரூபா 60000/- (அறுபதினாயிரம்)

4. Dr. N. A இரஞ்சிதன் U. S A. தமிழர் ஆதார நிறுவனம் ரூபா 119836/- (ஒரு இலட்சத்து பத்தொன் பதினாயிரத்து எண்ணூற்று முப்பத்தாறு)

5. இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் ரூபா 224344/– இரண்டு இலட்சத்து இருபத்தி நான்காயிரத்து முந்நூற்று நாற்பத்து நான்கு)

6. இலண்டன் ஸ்கொட் நிறுவனம் ரூபா. 82500/- (எண்பத்திரண்டாயிரத்து ஐந்நூறு)

7. S. K. ரேடிங் கொம்பனி ரூபா 303000/– (மூன்று இலட்சத்துமூவாயிரம்)

8. சுவிற்சலாந்து திரு. லோகேஸ்வரன் தலைமையில் ரூபா 182986/- (ஒரு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து தொளாயிரத்து எண்பத்தி ஆறு)

9. அவுஸ்திரேலியா அபயகரம்நிறுவனம்ரூபா167982/- (ஒரு இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்திதொழாயிரத்தி எண்பத்திரண்டு)

10. கனடா திரு. கந்தர் சோமஸ்கந்தர் அவர்கள்ரூபா 125000/- (ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம்)

11. இலண்டன் மெடிக்கல் சென்ரர் ரூபா 110,000/- (ஒரு இலட்சத்து பத்தாயிரம்)

மேற்காட்டியவர்ளோடு மேலும் பல நிறுவனங்களும் தாராள சிந்தை உடையோரும், அறக்கொடையாளர் களும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து இல்லத் தின் வளர்ச்சிக்காக அன்பளிப்புகளை வழங்கிக் கொண்டே இருக்கின்றனர்.

திருமணநாள், பிறந்ததினம், சிரார்த்ததினம் ஆகிய நாட்களில் இல்லப்பிள்ளைகளுக்கு உணவு வழங்க நிதி வழங்குவோர் பலர். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியைச் சேர்ந்த செல்விகள் இராம லிங்கம் அவர்கள் இல்லவளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வருகிறார்கள். கொழும்பு பாமன்கடலேனைச் சேர்ந்த வைத்தியகலாநிதி செ. சிவலிங்கம் அவர்கள் மாதம் தோறும் ஒரு தொகைப் பணத்தை அன்பளிப்புச் செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். யாழ். போதனா வைத் தியசாலை வைத்தியகலாநிதி திருமதி. கனகசபை அவர் களும் அன்பளிப்புச் செய்து இல்லப் பணிகளை ஊக்கு வித்தமை குறிப்பிடத்தக்கதாகும். அமரர் இரத்தினேஸ் வரி சுப்பிரமணியம் ஞாபகமாக ஆயிரம் அமெரிக்க டொலர் (73000/—) தேசிய சேமிப்பு வங்கியில் இடப்பட்டது.

## நல்லூரில் அமைந்த ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் :

நாவலர் பெருமான் அவதரித்த நல்லூர்ப் பதியிலே எமது சமூகத் தொண்டையும், சைவத் தொண்டையும் மேலோங்க வைக்க வேண்டும் என்ற உயர்ந்த உள்ளம் எங்கள் பெரியம்மா கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும் ஆலய நிர்வாக சபையினருக்கும் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக அமைந்திருந்தது. நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி விசாலாம்பாள் அரியகுட்டி அம்மையாரின் அறச் சிந்தனை இதற்கொரு உந்து சக்தியாக அமைந்தது. நல்லைக் கந்தப் பெருமானின் உற்சவ காலங்களிலே 25 தினங்களும் அன்னதானம் வழங்குவதற்கும் விசேட

உற்சவ காலங்களில் தண்ணீர்ப்பந்தல் நடாத்துவதற்கும் உரிய ஒருங்குகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப் படுகிறது. யாழ் குடாநாட்டு வர்த்தகப் பெரு மக்கள் அன்னதான நிகழ்வுகளுக்கு பேருதவி புரிந்து வருகின்றனர்.

## விசேட நிகழ்வுகள் :

10-04-1999 சனிக்கிழமை மண்டபத் திறப்பு விழா நாள் 24-04-1999 ஞாயிறு திரு. க. குணராசா (செங்கை ஆழியான்) தலைமையில் யாழ் இலக்கியவட்டம் நடத்திய விழா. இந்து சமய கலாச்சார அமைச்சின் சார்பிலே அறநெறிப் பாடசாலைப் பரிசளிப்பு விழா 11-07-1999 ஞாயிற்றுக்கிழமை இங்கு நடைபெற்றது. நல்லூர் மகோற்சவ காலத்தில் 25 தினங்களும் பக்திப் பாடல் இசை நிகழ்ச்சியை இளங்கலைஞர் மன்றம் நடாத்தி வருகின்றது. ஆரிய திராவிடபாஷா அபி விருத்திச் சங்க முத்தமிழ் விழா 19-09-1999 ஞாயிறு இங்கு சிறப்பாக இடம்பெற்றது. மேலும் நவராத்திரி விழா, கந்தசஷ்டி விழா, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை உரிய காலங்களில் இங்கு சிறப்பாக நடைபெற்றது.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி அம்மாவின் பவள விழாவும் மிகவும் எழுச்சியாக இங்கு இடம்பெற்றது. ஏறக் குறைய நாற்பது திருமணங்கள் இவ்வாண்டு இம்மண்ட பத்தில் நிறைவேறின என்பது குறிப்பிடத்தக்கது.

## திருத்த வேலைகள்

இவ்வாண்டு அன்னையர் இல்லக் கட்டடமும் நூல் நிலையமும், சமையலறைகளும், கோசாலை மண்டபமும், துர்க்காபுரம் மகளிர் இல்ல நிதியிலிருந்து திருத்த வேலைகள் செய்து நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திருத்த வேலைகளுக்கு ஏறக்குறைய பத்து இலட்சம் ரூபா வரையில் செலவு செய்யப்பட்டது. அனைத்துக் கட்டடங் களுக்கும் நீர்த் தொட்டிகள், மலசலகூடவசதி, மின்னிணைப்புகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

**நன்றி கூறுகிறோம் :**

இம் மகளிர் இல்லத்தின் பதினெட்டாவது ஆண்டு விழாவிலே பலருக்கு நன்றி கூற வேண்டிய கடமை எமக்குண்டு.

1. எங்கள் இல்லப்பணிகளுக்கு ஆதரவு வழங்கிவரும் தேவஸ்தான நிர்வாக சபையினர்.
2. எமது பணியை நல்லபடி ஊக்குவித்து அன்பளிப்புக்களை நல்கி வரும் உள்ளூர் வெளியூர் அன்பர்கள்.
3. மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கு வைத்திய உதவிகளும், ஆலோசனைகளும் வழங்கும் வைத்தியக் கலாநிதி ம. மகேசன் அவர்கள் (உடுவில்) வைத்திய கலாநிதி க. ஈஸ்வரி அவர்கள் (தெல்லிப்பழை)
4. பிள்ளைகளின் பரீட்சையிலும் போட்டிகளிலும், தமிழ் சமயம் முதலிய பாடங்களை நன்கு கற்பித்து ஊக்கமளித்தும் உள்நாட்டு வெளிநாட்டு கடிதங்களை ஏற்று நல்லபடி பதில் எழுதித் தலைவர் அம்மாவுக்கு உதவிவரும் செல்வி த. தவனேஸ்வரி அவர்கள்.
5. பண்ணிசை, கர்நாடக இசை ஆகியவற்றிலே நல்ல பயிற்சி அளித்து போட்டிகளிலும் பரிசு பெற வைக்கும் செல்வி வி. வடிவாம்பிகை அவர்கள்.
6. அலுவலகப் பணியை நன்கு பேணி வரும் செல்வி ச. ரேவதி அவர்கள், செல்வி த. மஞ்சுளா அவர்கள்.
7. நடனம், நாட்டிய நாடகம் ஆகியவற்றிலே பயிற்சி அளித்து மேடை ஏற்றிப் பரிசுபெற வைக்கும் ஆசிரியை திருமதி நந்தினி சிவராஜன் அவர்கள்.
8. இல்லக் கடமைகளிலும் மற்றும் மகளிர் இல்லப் பிள்ளைகளின் நிகழ்வுகளிலும் முன்னின்று பயிற்சி அளித்து உதவும் அருட்சகோதரி ஜதீஸ்வரி அம்மையார்.

9. காலமும் நேரமும் அறிந்து எமது செய்திகளை இந்நாட்டுச் செய்தி இதழ்களாகிய உதயன், வலம்புரி, மற்றும் தினக்குரல் தினகரன், வீரகேசரி ஆகிய தினசரிகளிலும் பிரசுரித்து உதவும் பத்திரிகைத் துறையினர்.

10. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சிப் பிரிவினர், இலங்கை வானொலி யாழ். சேவையினர்.

11. ஆங்கில பாட போதனையை நல்லபடி கற்பித்து வரும் திரு. சி. அருளானந்தசிவம் அவர்கள்.

12. நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபப் பணியாளர்கள், இங்கு நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டு நற்பணியாற்றிவரும் திரு. நா. தவமணிநாயகம் அவர்கள்.

13. நீர் மின் இணைப்பு வேலைகளை செய்துதவும் திரு. த. தயானந்தன் அவர்கள்.

14. கடிதத் தொடர்புகள் அச்சகப் பணிகளை ஒப்பு நோக்கல், வங்கி வைப்புக்கள் அன்பளிப்புக்கான பற்றுச்சீட்டுகள் பதிதல், அனுப்புதல் ஆகிய பணிகளைச் செம்மையாக நிறைவேற்றித்தரும் அலுவலகர் திரு. கா. சிவபாலன் அவர்கள்.

15. மகளிர் இல்ல அச்சுப்பணிகளை நல்லபடி நிறைவேற்றித் தரும் திருமகள் அழுத்தகத்தினர் ஆகியோருக்கு எமது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

"நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பரமர்க் கங்காமே"

என்பதை நினைவிலிருத்தி மக்கள் பணியை மகேசன் பணியாக நினைத்து ஆவன செய்வோமாக,

துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை.
03-02-2000

த. தவனேஸ்வரி
(4ஆம் வருடம் கலைப்பிரிவு)
யாழ் / பல்கலைக் கழகம்.

உ

# இல்லக்கீதம்

## பல்லவி

வாழிய வாழியவே என்றென்றும்
மாண்புடனே மகளிர் இல்லம் ஓங்கியே நின்று — வாழிய

## அனுபல்லவி

அன்னை துர்க்கை நிழலில் அணிதெல்லி பூரினில்
பன்னிப் பரவிடும் பாவையர் இல்லம் என்றும் — வாழிய

## *சரணம்*

ஒழுக்கம் உயர்பண்பு உண்மையான கல்வி
விழுப்பம் தரும்என்ற மேலோர்கள் வார்த்தையை
மதிதது நடந்துமே வாழ்வெய்தி நாளுமே
மங்காப் புகழெய்தி மங்கையர் மாண்புற — வாழிய

காலையும் மாலையும் வழிபாடு பஜனை
கல்விக் கூடக் கல்வி யோகசனமும்
கோசாலை தோட்டம் குடிசைக் கைத்தொழில்கள்
கொண்டுமிளிரும் துர்க்கா மகளிர் இல்லம் என்றும்—வாழிய

பெண்களே நாட்டின் கண்களெனப் புகழ்ந்து
மேதினியோர் என்றும் வியந்துமே போற்றுவர்
எங்கள் நல்வாழ்வும் இனிய செந்தமிழும்
எழில்மிகு சைவமும் ஏற்றமுற்று விளங்க — வாழிய

# இல்லப் பணியாளர் விபரம்

திரு. கா. சிவபாலன் – *பிரதம லிகிதர்*
செல்வி த. மஞ்சுளா – *உதவி லிகிதர்*
செல்வி. ச. ரேவதி – *உதவி லிகிதர்*
செல்வி க. காமாட்சி
செல்வி பெ. செல்வராணி
செலவி எஸ். மீனா
செல்வி சு. சுகந்தினி
திரு. செ. வல்லிபுரம்
திரு. வே. பாக்கியமுத்து

வங்கிகள் :

1. இலங்கை வங்கி, சுன்னாகம் – 4923
2. இலங்கை வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் – 12977
3. இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி – 0037-01-0004020-4

உள்துறைக் கணக்காய்வாளர் :

திரு. எ. சின்னத்தம்பி *(கூட்டுறவுப் பரிசோதகர்)*

பட்டயக் கணக்காய்வாளர் :

செல்வேந்திரா அன். கோ. யாழ்ப்பாணம்

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.